தினமணி சென்னை

புதன்கிழமை, 20 ஜனவரி, 2010

# புதிய முதுநிலை மருத்துவப் படிப்பு



சென்னை போரூர் ஸ்ரீராமச்சந்திரா பல்கலைக்கழகத்தில் இரண்டு ஆண்டு முதுநிலை சமூக மருத்துவயியல் முதுநிலை படிப்பு வரும் கல்வி ஆண்டு (2010-11) முதல் தொடங்கப்படுகிறது. அமெரிக்க பெர்கிலி-கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்துடன் இணைந்து இந்தப் புதிய படிப்பு தொடங்கப்பட்டுள்ளது. எம்.பி.பி.எஸ்., எம்.எஸ்ஸி., பொறியியல் பட்டதாரிகள் இந்த சுற்றுச்சூழல்-மாசுக் கட்டுப்பாடு குறித்த முதுநிலை படிப்பில் சேரலாம். இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது, பெர்கிலி-கலிஃபோர்னியா பல்கலைக்கழக சமூக மருத்துவக் கல்வி நிறுவன முதல்வர் டாக்டர் ஸ்டீபன் எம் ஷார்டெல்லை (இடது) கௌரவிக்கிறார் ஸ்ரீராமச்சந்திரா பல்கலைக்கழக வேந்தர் வி.ஆர்.வெங்கடாசலம். உடன் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன்.